ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2379/04 - 2024 අප්‍රේල් මස 08 වැනි සඳුදා - 2024.04.08
*2379/04 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) (ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) (ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 66705 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் இல. 249/1, மாலபே வீதி, கொஸ்வத்த, பத்தரமுல்லையில் அமைந்துள்ளதுமான KIU கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதிய 2353/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் "சட்டமாணி சிறப்பு" என்னும பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. KIU கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் தரவு விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6) தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்-

   (அ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரத்தில்) பௌதிக விஞ்ஞான பாடத்துறையில் அல்லது பொறியியல் தொழில்நுட்பவியல் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் ; அல்லது

(ஆ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரத்தில்) ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் மற்றும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர் தரத்தில்) ஏதேனும் அமர்வில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்னுட்பத்தில் சாதாரண சித்தி (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் அத்துடன் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (சாதாரண தரத்தில்) கணிதப் பாடத்தில் திறமைச் சித்தி (C) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் ; அல்லது

(இ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரத்தில்) ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் அத்துடன் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (சாதாரண தரத்தில்) கணிதப் பாடத்தில் திறமைச் சித்தி (C) அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இணைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றுடன் அதற்குச் சமமான தகைமைகள்.

2. KIU கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| தரவு விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி | பீஎஸ்சீ (தரவு விஞ்ஞானம்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2024, மாச்சு 05.

EOG 04-0076